**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**<u>DVC No.39/2023</u>**

**Deposition of Witness :PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | அஜித்குமார் | Taluk | |
| Father's Name | சந்திரசேகரன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 10.09.2025.** | | | |

**குறுக்கு விசாரணை**

1) நான் மனுதாரருக்கு அண்ணன் ஆவேன். மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் Fashion Designing 2016 –2019 வரை படித்தார். மனுதாரருக்கு 12.09.2018ம் தேதியன்று திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்பும் மனுதாரர் கருரில் இருந்து கல்லூரிக்கு சென்று வந்தார். 1ம் எதிர்மனுதாரர் உத்தரபிரதேச மாநிலத்திற்கு வேலைக்கு சென்றார். மனுதாரர் எப்போது உத்தரபிரதேச மாநிலத்திற்கு சென்றார் என்றால் கல்லூரி படிப்பு முடித்தபிறகு 1ம் எதிர்மனுதாரர் வந்து அழைத்து சென்றார். மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் உத்தர பிரதேச மாநிலத்தில் 3 மாதங்கள் தங்கி இருந்தார்கள். திருமணம் முடிந்து 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் 1 மாதம் தங்கி இருந்தார். அதன்பின்னிட்டு கருருக்கு வந்தார்.

2) 2021ம் ஆண்டு தீபாவளி சமயத்தில் எனக்கு தொழில் துவங்குவதற்காக நான் ரூ. 2 லட்சம் கேட்டபோது 1ம் எதிர்மனுதாரர் எனது வங்கி கணக்கில் ரூ. 50 ஆயிரம் அனுப்பினார் என்றால் இல்லை. ரூ. 50 ஆயிரத்தை 1ம் எதிர்மனுதாரர் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றும், நான் இதுநாள் வரை திருப்பி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2021ம் ஆண்டு மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஒப்பந்தம் ஒன்றை எழுதிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

தெரியும். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளீர்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

3) மனுதாரர் 2022 கரூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த புகாரின் பேரில் நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் அங்கு 1ம் எதிர்மனுதாரர் வந்து குழந்தையை கொடுத்துவிட்டு 5 மாதங்களில் நகைகளை திருப்பி கொடுப்பதாக சொன்னார். ஆனால் அவர் திருப்பி கொடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் திருமங்கலத்தில் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு கருருக்கு மாற்றம் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் விவாகரத்து ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியும். விவாகரத்தை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பொருட்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

4) திருமணத்தின்போது மனுதாரருக்கு எவ்வளவு நகை போட்டோம் என்றால் 25 சவரன் நகை போட்டோம். நான் சொல்வது பொய் என்றும், 25 சவரன் நகை போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் மதுரையில் இருந்து கருருக்கு எப்போது வந்தார்கள் என்றால் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கொடுமை படுத்தியதால் நாங்கள் சென்று அழைத்து வந்தோம். நான் சொல்வது பொய் என்றும், மேற்படி ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்தால்தான் சேர்ந்து வாழ்வேன் என்று மனுதாரர் சொன்னார் என்றும், ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்த மறுநாள் மனுதாரர் குழந்தையை அழைத்து கொண்டு கரூர் வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/-அஜித்குமார்

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்